ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

අංක 2378/41 - 2024 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2024.04.05
**2378/41 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 31 வது பிரிவில் (4) ஆம் உபபிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கொக்கல கடனீரேரி, மீன்பிடி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டம்*

**டக்ளஸ் தேவானந்தா,**
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2024, மாச்சு 31.*

**கொக்கல கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டம்.**

*இலங்கையில் அமைந்துள்ள 116 கடனீரேரிகளுக்கிடையில் காலி மாவட்டத்தில் அமைந்துள்ள கொக்கல கடனீரேரியின், சுற்றுச்சூழல் நிலையை உறுதியாகப் பேணுவதன் ஊடாக கடனீரேரி மற்றும் அது சார்ந்து மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத்தைப் பேணுதல் மற்றும் அதனை மேம்படுத்தும் நோக்குடன் இந்த சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், கோட்பாடுகள் மற்றும் செயல் வழிமுறைகளை உள்ளடக்கிய ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*இந்த திட்டம் கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளருக்கு அனுப்பிய பின், இந்த திட்டம் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் கொண்டுள்ள இணக்கப்பாட்டை சரிபார்த்து கடற்றொழில் அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும். (31ஆ பிரிவு)*

*அமைச்சர் இந்த திட்டத்தை அங்கீகரித்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் செயற்பாட்டு நிலையை அடையும். (31ஆ 4 வது உபபிரிவு)*



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

61 ஆவது பிரிவின் கீழ் பொருத்தமான ஒழுங்குவிதிகள் தயாரித்தல் மற்றும் 34 ஆவது பிரிவின் கீழ் பொருத்தமான அறிவித்தல் வெளியிடப்படுவதன் மூலம் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைச்சரினால் செல்லுபடித்தன்மை வழங்கப்படுதல் வேண்டும். (31 ஆ 5 ஆவது பிரிவு)

## 01. கொக்கல கடனீரேரி முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு

2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 31 அ பிரிவுக்கு அமைய, கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழு இதன் பின்னர் **"கொக்கல கடனீரேரி முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு" என அழைக்கப்படும்.** இதன் உள்ளடக்கம் இணைப்பு இல. 01 ஆக தரப்பட்டுள்ளது.)

## 02. கொக்கல கடனீரேரி முகாமைத்துவ ஒருங்கிணைப்பு திட்டம் செயற்படுத்தப்படும் அதிகாரப் பிரதேசம்.

இலங்கையில் தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தில், ஹபராதுவ மற்றும் இமதுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கல கடனீரேரி நீர்ப்பரப்பு மற்றும் அது சார்ந்து அடையாளம் காணப்பட்டுள்ள 14 கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய தரைப் பிரதேசம் (2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திருத்தச் சட்டத்தின் மீன்பிடி முகாமைத்துவ பிரதேசங்கள் 31 (1) ஆம் பிரிவின் கீழ் 1997/18 ஆம் இலக்க 2016.12.15 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கொக்கல மீன்பிடி முகாமைத்துவ அதிகாரப் பிரதேசமாக இனம் காணப்பட்டுள்ளது.)

* பூகோள பரவு எல்லை - GPS தரவு அடங்கிய வரைபடத்தின் மூலம் கொக்கல கடனீரேரிக்குள் அடையாளம் காணப்பட்ட அதிகாரப் பிரதேசம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

* கொக்கல கடனீரேரியில் அடையாளம் காணப்பட்ட தரைப் பகுதியின் எல்லையான கொக்கல பிரதேச செயலாளர் பிரிவின் கிராம அலுவலர் பிரிவுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கொடவத்த | - | 149C |
| 2. | ஹருமல்கொட கிழக்கு | - | 149A |
| 3. | கட்டுகுருந்த | - | 144C |
| 4. | கொக்கல மேலதிகம் 2 | - | 144E |
| 5. | கொக்கல மேலதிகம் 1 | - | 144D |
| 6. | கொக்கல | - | 144A |
| 7. | அட்டதாஹேவத்துகொட | - | 162A |
| 8. | கத்தளுவ மேற்கு | - | 162 |
| 9. | அளவத்துகிஸ்கொட | - | 164G |
| 10. | பெலஸ்ஸ | - | 166C |

* கொக்கல கடனீரேரியில் அடையாளம் காணப்பட்ட தரைப் பகுதியின் எல்லையான இமதுவ பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தித்தகல்ல | - | 166A |
| 2. | கஹந்த | - | 167 |
| 3. | கஹந்த மேலதிகம் | - | 167A |
| 4. | பொல்ஹேன | - | 154B |

## 03. கொக்கல கடனீரேரியின் மீன்பிடி முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு தலையிட்டு செயற்படுத்த வேண்டிய பிரதான செயற்பாடுகள்;

* கொக்கல கடனீரேரிக்குள் மற்றும் அது சார்ந்த பிரதேசங்களில் செயற்படுத்தக்கூடிய அல்லது செயற்படுத்த வேண்டிய செயற்பாடுகள்/அபிவிருத்தி திட்டங்கள் அடங்கலான செயற்றிட்டங்களை வருடாந்தம் தயாரித்து திட்டத்தில் காட்டப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கமைய அமைத்து செயற்படுத்தல்.

* கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு குழுவின் சகல உறுப்பினர்களின் மற்றும் தரப்பினரான நிறுவனங்கள், இந்த திட்டத்தின் மீது அமைந்து தமது சேவைகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்புடைய அனுமதி வழங்குதல் வேண்டும்.

## 04. கோட்பாடுகள்

கடனீரேரி சூழல் தொகுதியின் வளங்கள், கடனீரேரி சூழல் தொகுதியில் உயிரியல் பல்வகைமையை பாதுகாத்தல், வனவிலங்குகள் மற்றும் பரம்பரைக்கிடையில் நியாயமான அறுவடை, பயன்பாடு மற்றும் நுகர்வு தொடர்பான தீர்மானம் எடுக்கையில் ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் மூலம் கீழ் குறிப்பிடப்படும் கோட்பாடுகள், பெறுமானங்களுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

* வளங்களின் சமனான பகிர்வு
* சட்டபூர்வத்தன்மை
* ஒருங்கிணைப்பு
* வெளிப்படைத் தன்மை
* சூழல் நேயம்
* வினைத் திறன் மற்றும் செயல்திறன்
* பொறுப்புக்கூறல்
* பொது இணக்கப்பாடு (சாதி, சமய, மொழி, குலம், அரசியல் தொழிற்பலத்தை கருதாது)
* பயனுள்ள துலங்கல்
* கூட்டாண்மை

## 05. நிறுவன கட்டமைப்பு

### 05.1. செயற்படுத்தும் நடைமுறை

1. கொக்கல கடனீரேரிக்குள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கடனீரேரி சார்ந்த மீனவர்கள் அடங்கிய முகாமைத்துவ குழுக்கள் 04 ஆகும். (1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 3 ஆவது உபபிரிவின் கீழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் மீன்பிடி குழுக்களை பிரகடனப்படுத்தும் 2027/33 ஆம் இலக்க 2017.07.13 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி இணைப்பு 03 இன் கீழ் தரப்பட்டுள்ளது.

| | மீன்பிடி குழுவின் பெயர் | பதிவிலக்கம் |
|---|---|---|
| 1.1 | கொக்கல-குருகந்த கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு | திஜதெ/தீ/கமிட்டி/கொ.க 01 |
| 1.2 | கொக்கல-தூவ மலலகம கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு | திஜதெ/தீ/கமிட்டி/கொ.க/02 |
| 1.3 | கொக்கல-144A மோதரகொட (சிங்கதீவரகம) கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு | திஜதெ/தீ/கமிட்டி/கொ.க/03 |
| 1.4 | கொக்கல-குருகந்த கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு | திஜதெ/தீ/கமிட்டி/கொ.க/04 |

* குருகந்த கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் உறுப்பினர்கள் 52 ஆகும்.
* தூவமலலகம கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு.
  (மாகல்தொட்ட/தூவமலலகம/ஹருமல்கொட) உறுப்பினர்கள் 110 ஆகும்.
* பெலஸ்ஸ மீனவ அமைப்பு எனும் பெலஸ்ஸ கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு.
  (பொரளுகெட்டிய/பெலஸ்ஸ/தித்தகல்ல) உறுப்பினர்கள் 52 ஆகும்.
* சிங்ஹதீவரகம கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு (கொக்கல) உறுப்பினர்கள் 38 ஆகும்.

2. கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுக்கள் 04 தனித்தனியாக மாதத்துக்கு ஒருமுறை ஒன்று கூடியிருக்கும் நாட்களில் கூட்டம் கூடப்படலாம்.

3. கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுக்கள் 04 யினுள்ளும் பெயர் முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் மூலம் ஒரு குழுவிலிருந்து 03 உறுப்பினர்கள் வீதம் 12 உறுப்பினர்கள் கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவை பிரதிநிதித்துவப்படுத்துவர்.

4. 04 கடனீரேரி முகாமைத்துவ குழுக்களினதும் வருடாந்த பொதுக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதத்தில் கூட்டப்படலாம்.

5. கொக்கல கடனீரேரி மீன்பிடி குழுக்கள் 04 இனதும் பிரதிநிதித்துவத்துடன் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்திற்கு அமைவாக 2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திருததச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கொக்கல கடனீரேரிக்கு ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்படும். அதன் கூட்டமைவு இணைப் இல. 01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. (இக்குழுவில் கடனீரேரியைச் சுற்றியுள்ள விவசாய அமைப்பின் உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

6. கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு குழு ஒவ்வொரு 03 மாதத்துக்கு ஒருமுறை நடைபெறும். அத்துடன் மாவட்டத்தின் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அதற்கு அழைப்பாளராக செயற்படுவதுடன் மாவட்ட செயலாளரின் தலைமையில் இது நடைபெறும்.

7. அத்தியாவசிய தேவையின்போது அக்குழு குறிப்பிட்ட காலத்துக்கு முன் கூடலாம்.

## 05.2 நிறுவன கட்டமைப்புக்குள் தீர்மானமெடுக்கும் முறை

1. கடனீரேரியில் நீர்வாழின வளங்களை அறுவடை செய்தல், பயன்படுத்தல் மற்றும் நுகர்வு தொடர்பாக தீர்மானம் எடுக்கும் நடைமுறை கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு மற்றும் கொக்கல ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் மூலம் இந்த திட்டத்துக்குள் இனம் காணப்பட்ட கொள்கை மற்றும் இணக்கப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் தலைவராக காலி மாவடட செயலாளர் செயற்படுவார்.

3. கடனீரேரிக்குள் மீன்பிடி செயற்பாடு மேற்கொள்வது பற்றி கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு அல்லது கடற்றொழில் அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதில். யாதேனும் தீர்க்கப்படாத பிரச்சனைகள் தோன்றுமானால், அதனை கொக்கல ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவுக்கு முன்வைத்தல் வேண்டும்.

4. கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவுக்கு கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுக்களின் முன்மொழிவை சமர்ப்பிக்கும்போது, சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்மொழிவு தொடர்பாக ஒவ்வொரு கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவினாலும் பெரும்பான்மை அங்கீகாரத்துடன் முன்மொழிவுகளை ஏற்றுக்கொண்டு கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவில் விவாதத்திற்கும் தீர்மானத்துக்கும் உடபடுத்துதல் வேண்டும்.

5. கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் தீர்மானத்துக்கு கொக்கல கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய தரப்பினரினால் சமர்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவுக்குள் (இல. 05.2.01) இற்குட்பட்டு கலந்துரையாடப்படுதல் வேண்டும்.

6. கடனீரேரி சூழல் தொகுதிக்கு தாக்கத்தை ஏற்படுத்தும எனக் கருதும் விதத்திலான அபிவிருத்தி முன்மொழிவு ஒன்று கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் அங்கத்துவ நிறுவனம் அல்லது தரப்பினரிடம் தேவையான அனுமதி மற்றும் விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும் போது அல்லது அத்தகைய அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்தும்போது, கொக்கல ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவிலிருந்து தேவையான அனுமதியை முதலாவதாக பெற்றுக் கொள்ள வேண்டும்.

   6.1 இந்த அனுமதி வழங்கும்போது அந்த செயற்றிட்டத்துக்கு கரையோரம் பேணல் திணைக்களத்தினது அங்கீகாரத்தையும் கடனீரேரியின் ஏனைய எல்லைகளில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ளுமாறும் இதன் பின்னர் சம்பந்தப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளை கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் தொழில்நுட்ப குழுவின் பரிந்துரைக்கு சமர்பித்தல் வேண்டும்.

6.2 கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழு மற்றும் தொழில்நுட்ப குழு சமர்பிக்கப்படும் முன்மொழிவுகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு முடியாத சந்தர்ப்பம் ஏற்படுமானால் அது பற்றிய தீர்மானம் எடுப்பதை இலகுபடுத்தும் முகமாக ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவினால் தேசிய மட்டத்தில் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக செயற்படும் நிறுவனங்களின் கருத்தை அறிந்து தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

7. கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவினால்கடனீரேரிக்குரிய பிரதான இல. 05 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தி கண்காணித்தல், ஒழுங்கமைப்பு மற்றும் பின்னூட்டங்களுக்கு கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 05.3 கொக்கல கடனீரேரி முகத்துவாரம் திறக்கும் வழிமுறை

1. கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழு அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப குழு கொக்கல முகத்துவாரம் திறக்கும் வழிமுறைக்குத் தேவையான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அதற்கமைய கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் அங்கத்துவ நிறுவனமான நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் கீழ்குறிப்பிடப்படும் நிறுவனங்களுடன் இணைந்து சம்பந்தப்பட்ட விடயத்தை செயற்படுத்த முயற்சி செய்தல் வேண்டும்.

2. நீர்ப்பாசன திணைக்களம், கடனீரேரியின் வெள்ளப்பெருக்கு எல்லையை (1 அடி 9 அங்குலம்) அடையாளப்படுத்தல் வேண்டும். எல்லையை மீறும்போது வெள்ளப்பெருக்கு பாதிப்பை ஏற்படுத்துவது காரணமாக கடனீரேரி முகத்துவாரத்தை திறப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களம் பின்வருமாறு செயற்படுதல் வேண்டும்.

3. நீர்ப்பாசன திணைக்களம், கடனீரேரி முகத்துவாரத்துக்கு அண்மையில் கடனீரேரி நீர் மட்டம் மற்றும் வெள்ளநீர் மட்டம் குறிப்பிடப்பட்ட அளவிடும் உபகரணம் ஒன்றை பொருத்துதல் வேண்டும். இல்லையெனில் கதளுவ பாலத்தில் அதனைக் குறிப்பிடல் வேண்டும்.

4. வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது கடனீரேரி முகத்துவாரம் சார்ந்த மணல் திட்டை அகற்றுவதற்கு கரையோரம் பேணல் திணைக்களத்தின் கண்காணிப்பு இருத்தல் வேண்டும். அத்துடன் இதற்கு முன்னர் சில சந்தர்ப்பங்களிலும் கரையோரம் பேணல் திணைக்களத்தின் கடனீரேரி முகத்துவாரம் திறந்தவாறு கடனீரேரி முகத்துவாரத்தை திறப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களத்துக்கு இயலுமையுண்டு. எனினும் சகல சந்தர்ப்பங்சகளிலும் கரையோரம் பேணல் திணைக்களத்தின் கண்காணிப்புக்காக தலையிடுதல் கட்டாயமாகும்.

5. வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது முகத்துவாரத்துக்குள் உள்ள மணல் திட்டை வெட்டி கடனீரேரியின் நீரை கடலுக்கு அனுப்புவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் பணிகளை முன்னெடுத்தல் வேண்டும்.

6. கடனீரேரி மணல் திட்டை அகற்றும்போது கரையோரம் பேணல் திணைக்களத்துக்கு தெரியப்படுத்திய பின் அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவரின் கண்காணிப்பு அல்லது அறிவுறுத்தலின்மீது மணல் திட்டை தேவையான அளவு அகற்றி வெள்ளப் பெருக்கின் அபாயத்தைத் தவிர்க்க வேண்டும்.

7. நீர்ப்பாசன திணைக்களத்தினால் இனம் காணப்பட்டுள்ள 1.9 அடி நீர் எல்லைக்கு மேலதிகமாக கடனீரேரிக்கு அண்மையில் வயல் நிலங்களுக்கு பாயும் மழை நீரினால் பாதிப்புறும் நிலையின்போது நித்தகல்ல கிழக்கு அல்லது மேற்கு விவசாய அமைப்பின் மூலம் துறைசார் மட்ட விவசாய அதிகாரிகள் தொழில்நுட்ப குழுவினால் இனம் காணப்பட்டுள்ள நிறுவனத்தின் மூலம் நீர்ப்பாசன திணைக்களத்தினால் கடனீரேரி முகத்துவாரத்தை வெட்டி நீரில் அமிழும் வயல் நிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்க முயற்சி செய்தல் வேண்டும். இச்சந்தர்ப்பத்திலும் கரையோரம் பேணல் திணைக்களத்தின் கண்காணிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. மேற்குறித்த விடயங்களுக்கு அப்பால் எந்த தரப்பினரும் முகத்துவாரம் சார்ந்த மணல் திட்டை அகற்றுதல் கூடாது.

## 06. கடனீரேரியின் பாதுகாப்பான இயற்கை வளம்

* கடனீரேரி முகாமைத்துவ அதிகாரப் பிரதேசத்துக்குள் உள்ள தரைப்பகுதி/கடனீரேரி நீர், மீன்கள், பறவைகள் அதிலுள்ள நீர் வளங்கள் மற்றும் ஏனைய நீர்வாழிகள் மற்றும் இனம் காணப்பட்ட தீவுகள் அடங்கலாக கண்டல்தாவர சூழற் தொகுதியிலுள்ள சகல தாவர சமூகமும் கொக்கல கடனீரேரிக்குரிய இயற்கை வளங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

* கண்டல் தாவரம் சார்ந்த பிரதேசம், கடனீரேரி அதிகாரப் பிரதேசம் GPS தொகுதியில் இணைப்புகளை அடையாளம் இடும் போது இனங்காணப்பட்டுள்ளதுடன் அப்பிரதேசம் சூழல் விழிப்புணர்வு பிரதேசமாக பெயரிடப்படும்.

* நீர்வாழினங்கள் இனப்பெருக்கம் செய்யும் விசேட இடங்களை இனம் கண்டு அந்த இடங்கள் மற்றும் எல்லைகள், மீன் அறுவடை செய்வதற்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக பெயரிடப்படும்.

(கொக்கல விமானப் படையினரால் மிதப்புகள் பயன்படுத்தி வேறாக்கப்பட்ட எல்லை)

* உணவுக்குப் பயன்படுத்தும் மீன்களை தவிர ஏனைய சகல உயிரினங்கள் மற்றும் உயிரற்ற வளங்கள் கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் அனுமதியின்றி அல்லது அங்கீகாரமின்றி ஆய்வு செய்தல்/ கையகப்படுத்தல்/ அழித்தல்/ நிரப்புதல் போன்ற விடயங்கள் கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ திட்டத்தை மீறும் விடயங்களாக கருதப்படுவதுடன் இவ்வாறான எவ்வித செயற்பாடுகளும் கடனீரேரி எல்லையினுள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்துக்குள் மேற்கொள்ளலாகாது.

* கடனீரேரிக்குள் நீரைக் கொண்டுவரும் கால்வாய்கள் பாதுகாக்கப்பட்டவை, கால்வாய் கரையிலிருந்து ஒரு பக்கத்திற்கு குறைந்த பட்சம் 05 மீற்றர் வீதம் இருத்தல் வேண்டும்.

புவக்ஹகஹக்கிஸ்ஸ கால்வாய்
கஹந்த கால்வாய்
பம்பானம கால்வாய்
மத்தேகொட கால்வாய்
அட்டானகித்த கால்வாய்
கீனத் கால்வாய்
வெலி துடுவ கால்வாய்
பெலஸ்ஸ பெரிய கால்வாய்
பெலஸ்ஸ சிறிய கால்வாய்
ஹொரகன்தெனிய கால்வாய்
இதன்கிஸ்ஸ கால்வாய்
வெலமட/பொல்ஹேன கால்வாய்

## 07. கொக்கல கடனீரேரிக்குள் புரியக்கூடிய மற்றும் புரிய முடியாத செயற்பாடுகள் மற்றும் வரையறைகள்

### 07.1 கொக்கல கடனீரேரி மீனவர்களுக்கு,

1. கொக்கல கடனீரேரி மீனவர்களின் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள 04 கடனீரேரி முகாமைத்துவ குழுக்குள் அதிகபட்சம் பதிவு செய்துள்ள 700 மீன்வர்கள் வரை மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

2. கொக்கல கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய ஒவ்வொரு மீனவரும் தனக்கு தோணி ஒன்று இருக்குமாயின் அந்த தோணியை கடற்றொழில் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அத்துடன் அதன் பதிவிலக்கத்தை தெளிவாக காட்சிப்படுத்தும் வகையில் தோணியின் இரு பக்கங்களிலும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

3. கொக்கல கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய ஒவ்வொரு மீனவரும் தான் மேற்கொள்ளும் தொழில் முறையை கடற்றொழில் திணைக்களத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

4. மீன்பிடி செயற்பாடு, நாளொன்றுக்கு ஒருமுறை மட்டும் மேற்கொள்ள வேண்டும். தேவையேற்படின் அதற்கு வரையறை விதிக்க அதிகாரம் உண்டு.

5. கொக்கல கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய தொழில்முறை

   - வலை தொங்கவிடுதல்
   - வீச்சு வலை
   - தூண்டில் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு மட்டும்.

6. கடனீரேரிக்குள் தொங்கவிடும் வலை பயன்படுத்தும்போது அந்த வலைக்கு முறையான மிதப்பு பயன்படுத்தல் வேண்டும்/ இனங் காண்பதற்கு அடையாளம் இட்டிருத்தல்.

7. பதிவு செய்துள்ள மீனவர்களுக்கு கடனீரேரியில் பயன்படுத்தக்கூடிய தொங்கவிடும் வலையின் அதிக பட்ச நீளம் 28 ஆழ அளவு (மீற்றர் 56) வீதம் 06 பீஸ் வரை (கடனீரேரியில் மீன் அறுவடை குறையும்போது இந்த வலை பீஸின் அளவு அது கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவின் தீர்மானத்தின்படி குறைக்க முடியும்).

8. நண்டுக்காக அத்தாங்கு வகைகளை பயன்படுத்த முடிவதுடன் அதன் கண்ணளவு குறைந்த பட்சம் 4 அங்குலமாகும். அது பயன்படுத்தக்கூடிய காலமாவது நாளின் முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை மாத்திரமாகும்.

9. மீன்கள் மற்றும் இறால் பிடிப்பதற்கு வீச்சு வலை பயன்படுத்தக்கூடியது பிற்பகல் 5.00 மணி முதல் முற்பகல் 8.00 மணி வரை மாத்திரமாகும்.

10. இறால் பிடிப்பதற்கு வலைகளை பயன்படுத்த முடிவது வருடத்தின் திசெம்பர் மாத ஆரம்பத்திலிருந்து பின்னைய வருடம் ஏப்ரல் மாதம் இறுதி வரையாகும்.

11. மீன்களுக்கு பயன்படுத்தக்கூடிய வலையின் கண்ணளவு குறைந்த பட்சம் 5/8 அங்குலங்கள் ஆக இருத்தல் வேண்டும்.

12. ஹெடெல்லா மீன்களுக்கு பயன்படுத்தக்கூடிய வலையின் கண்ணளவு குறைந்த பட்சம் 2 1/2 அங்குலத்துக்கும் 3 அங்குலத்துக்கும் இடைப்பட்டதாகும்.

13. பதிவு செய்துள்ள மீனவர்களுக்கு வருடம் முழுவதும் கடனீரேரியில் வீச்சு வலை பயன்படுத்த முடியும்.

## 07.2 கடனீரேரியில் செலுத்தக்கூடிய இயந்திர படகுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரையறைகள்

1. கடனீரேரியில் செலுத்தக்கூடிய இயந்திர (என்ஜின்) படகுகள் ஹபராதுவ பிரதேச சபைக்குள் பதிவு செய்திருத்தல் வேண்டும். அப்பதிவு பிரதேச சபையினால் படகு உரிமையாளருக்கு வழங்கப்பட முன்னர், சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் சம்பந்தப்பட்ட பிரதேச சபைக்கு கடனீரேரி நீர் மேற்பரப்பில் படகு செலுத்துவது பற்றி வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அளவுகோல்களை படகு உரிமையாளர் பூர்த்தி செய்கின்றாரா என்பதை கவனித்தல் வேண்டும். அந்த நிபந்தனைகளை நிறைவு செய்யாத இயந்திரப் படகை கடனீரேரிக்குள் செலுத்த அனுமதி வழங்கலாகாது.

2. சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் இயந்திரப் படகுகளின் எண்ணிக்கை 30 இற்குள் மட்டுப்படுத்தல், வேண்டும். அப் படகுகள் ஹபராதுவ பிரதேச சபையினால் பதிவு செய்திருத்தல் வேண்டும். அப்பதிவு இலக்கங்களை தெளிவாக படகின் இரு பக்கங்களிலும் காட்சிப்படுத்தல் வேண்டும். இது சம்பந்தமான தேவையான வழிமுறைகள் மற்றும் விதிகள் பிரதேச சபையினால் தயாரிக்கப்பட வேண்டும்.

3. கடனீரேரிக்குள் பயணிக்கும் இயந்திரப் படகுகளின் இயந்திரத்தின் சக்தி அதிக பட்சம் 15 (hp) குதிரை வலுவாக இருத்தல் வேண்டும்.

4. இயந்திரப் படகு கடனீரேரிக்குள் செலுத்தக்கூடிய காலமாவது முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையுமாகும்.

5. அனர்த்த நிலைமையின் போது, அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக கடனீரேரிக்குள் படகு செலுத்துவதற்கு அவசியமேற்பட்டால் மேற்குறித்த நேரங்கள் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பினருக்கு ஏற்புடையதன்று.

6. கடனீரேரிக்குள் மேற்குறித்த காலத்திற்கு அப்பால் செலுத்தப்படும் இயந்திரப் படகின் மூலம் பதிவு செய்துள்ள மீனவர்களின் வலைகளுக்கு ஏற்படும் சேதத்துக்கு அந்த வலை உரிமையாளர்களுக்கு வலையின் பாதிப்புக்கான பெறுமதியை வழங்க வேண்டும்.

## 07.3 நீரின் மேற்பரப்பில் தரையிறக்கக்கூடிய விமானம் பற்றிய வரையறைகள்

1. நீரின் மேற்பரப்பில் தரையிறக்கக்கூடிய விமானம் ஒன்றுக்கு தற்போது கொக்கல நீர்ப் பரப்பில் தரையிறக்குவதற்கு தேவையான அனுமதி அரச பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த விமானங்களைத் தவிர எதிர்காலத்தில் வேறு எந்தவொரு விமானமும் கொக்கல கடனீரேரியின் நீர்ப்பரப்பில் தரையிறக்குவதற்கு தேவையான அனுமதிகளை இந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வழிமுறைகளில் ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவினால் வழங்க முடியும். அத்துடன் இந்த வழிமுறையிலன்றி வேறு முறையில் அனுமதி வழங்கப்படலாகாது.

## 07.4 கொக்கல கடனீரேரிக்குள் தடை செய்யப்பட்ட செயற்பாடுகள்

1. கொக்கல கடனீரேரி முகத்துவாரத்துக்கு அண்மையிலிருந்து காலி - மாத்தறை வீதியின் கொக்கல பாலம் வரையுள்ள பிரதேசத்துக்குள் எவ்வித மீன்பிடி தொழில்முறையையும் பயன்படுத்துவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

2. கொக்கல கடனீரேரிக்குள் இறால் பிடிப்பதற்காக நடப்படும் ஆதாரங்களை நிரந்தரமாக அமைத்தல் கூடாது.

3. கடனீரேரிக்குள் மீன் பிடிப்பதற்கு கடனீரேரி முகாமைத்துவ குழுவில் உறுப்பினரல்லாத மற்றும் அதற்கான செயற்பாட்டு அனுமதிப் பத்திரம் இல்லாத எவரும் அனுமதிக்கபடலாகாது.

4. மீன்பிடி தொழில்முறைக்கு தங்கூஸ் வலை பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

5. கடனீரேரிக்குள் கீழ்க்குறிப்பிடப்படும் செயற்பாடுகளில் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவினால் தீர்மானிக்கப்படும் யாதேனுமொரு பொருத்தமற்ற தொழில்முறை இருப்பின் அவையும் மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தலாகாது.

    * வலை விரித்து நீரில் அடித்தல் மற்றும் மீன்களைப் பயமுறுத்தல்
    * நீரைக் கலக்குதல்
    * சேற்றை மிதித்து இறால் பிடித்தல்
    * மீன்களுக்கு குத்துதல் (கம்பி கூர்கள் மற்றும் ஈட்டி போன்ற ஆயுதங்கள் மூலம்)
    * வலைக்கூடு பயன்படுத்தி மீன் பிடித்தல் மற்றும் கடற்றொழில் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ள தடை செய்யப்பட்ட தொழில்முறைகளும் இவற்றில் அடங்கும்.

6. கடனீரேரி நீரின் மேற்பரப்பு மற்றும் கரையில் பாதுகாக்கப்பட்ட இடங்களில் எவ்வித தற்காலிக அல்லது நிரந்தர நிர்மாணங்களை நிர்மாணிப்பது அல்லது கடனீரேரியில் கழிவுகளை வெளியேற்றுவது கூடாது.

7. கடனீரேரி மீன் வளங்கள் பதிவு செய்துள்ள ஒவ்வொரு மீனவர்களினதும் பொது வளமாகும் என்பதைக் கவனத்திற் கொண்டு கடனீரேரியை துண்டுபடுத்தி உரிமையாக்குவதற்கு எவருக்கும் உரிமையில்லை.

8. கடனீரேரிக்குள் மீன் கொட்டு/இறால் கொட்டு அமைப்பது முற்றாகத் தடை.

## 08. கொக்கல கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி முகாமைத்துவ திட்டத்திற்கு திருத்தங்களை முன்வைத்தல்

கொக்கல கடனீரேரி மீன்பிடி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவினால் இந்த கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டம் வருடாந்தம் பின்னூட்டம் மேற்கொள்ளப்பட்டு, திருத்தங்கள் மற்றும் வருடாந்த செயற்பாடுகள் திட்டத்தில் உள்ளடக்க வேண்டும்.

## 09. கொக்கல கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விடயங்களை மீறும்போது -

- கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக இந்த திட்டத்துக்குள் உள்ள விடயங்களை மீறுமிடத்து, கொக்கல கடனீரேரி மீன்பிடி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் ஒவ்வொரு தரப்பினரும், அவ்வாறு சட்டம் மற்றும் இணக்கப்பாடுகளை மீறும் நபர்களை இனங் கண்டு இந்த திட்டத்துக்கு அமைய வெளியிடப்பட்டுள்ள கடற்றொழில் திணைக்கள ஒழுங்குவிதிக் கோவைக்கு அமைய மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளை விதிக்கு அமைய நடவடிக்கை எடுக்க முடியும்.
    - கடனீரேரியில் செலுத்தப்படும் படகு, கண்டல் தாவரங்களை வெட்டுதல், கடனீரேரியை நிரப்புதல், கடனீரேரியில் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்கள் தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறும் நபருக்கு மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக எந்தவொரு நபரும் மற்றும் நிறுவனமும் ஹுபராதுவ பொலிசுக்கு மற்றும் ஹபராதுவ/இமதுவ பிரதேச செயலாளருக்கு முறைப்பாடு செய்ய முடியும். இதன்போது அனுப்பும் முறைப்பாடு எழுத்து மூலமாக கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு குழுவின் செயலாளர் மற்றும் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.


    - கொக்கல கடனீரேரி ஒருங்கிணைப்பு குழுவை செயற்படுத்துவதற்குத் தேவையான வளங்கள் உறுப்பு நிறுவனங்களினால் இனம் காணப்படல் வேண்டும்.

## இணைப்பு - 01

2013 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் (திருத்த) சட்டத்திற்கு அமைய கொக்கல மீன்பிடி முகாமைத்துவ பிரதேசத்திற்காக அமைக்கப்பட்ட கொக்கல கடனீரேரி மீன்பிடி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் நியமிப்பின் மீது குழுவில் உள்ளடக்க வேண்டிய அதிகாரிகள், நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பட்டியல் பின்வருமாறு -

1. மாவட்ட செயலாளர் - காலி
2. மாவட்ட திட்டமிடல் மற்றும் வழிநடத்தல் பணிப்பாளர்
3. மாவட்ட கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர்
4. பிரதேச செயலாளர் - ஹபராதுவ
5. பிரதேச செயலாளர் - இமதுவ
6. தலைவர் பிரதேச சபை ஹபராதுவ
7. தலைவர் பிரதேச சபை இமதுவ
8. மாவட்ட கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் அதிகாரிகள் இருவர்
9. நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர்
10. மாகாண கடற்றொழில் பணிப்பாளர்
11. கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்
12. நாரா நிறுவனத்தின் அதிகாரி ஒருவர்
13. நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி ஒருவர்
14. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரி ஒருவர்
15. வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்
16. வன பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்
17. சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரி ஒருவர்
18. காணி அமைச்சின் அதிகாரி ஒருவர்
19. பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் - ஹபராதுவ
20. கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்
21. இலங்கை கடற்படையின் அதிகாரி ஒருவர்
22. இலங்கை விமானப் படையின் அதிகாரி ஒருவர் - கொக்கல
23. இடர் முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்
24. மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர்
25. கொக்கல கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுக்கள் 04 சார்பில ஒரு குழுவிலிருந்து 03 பேர் வீதம் 12 உறுப்பினர்கள்
26. நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்
27. நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்
28. மாவட்ட விவசாய அதிகாரி ஒருவர்
29. கொக்கல முதலீட்டு சபையின் அதிகாரி ஒருவர்
30. சுற்றுலா சபை அதிகாரி ஒருவர்
31. விவசாய சேவை திணைக்களத்தின் பிரதேச அதிகாரிகள் மூவர் கொக்கல/பஞ்சாலிய/பரகொட
32. விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் இருவர் வீதம் - நித்தக்கல கிழக்கு /நித்தக்கல மேற்கு/பெலஸ்ஸ/ஹருமல்கொட/தொரபே/அம்பாவில/வெலிகொந்த/கஹந்த/பெலவத்த/அலபஹல.
33. ரிட்பண்ண மீனவர் குழுவின் சார்பில் (02) இரு உறுப்பினர்கள்

**இணைப்பு - 02**


KOGGALA LAGOON
Scale 1:25,000
N
W
E
S
Koggala Lagoon
Railway
SEA
A2
Legend
Important Place
Railway
Main Road
Secondary Road
Track
Foot Path
Bund / Dam
Channel
River / Stream / Canal
Tank
SOUTHERN PROVINCE
GALLE DISTRICT
MATARA DISTRICT
HAMBANTOTA DISTRICT
Compiled Using 10,000 Database.
Prepared by Survey Department of Sri Lanka , Special Mapping Unit - 2015 .

*இணைப்பு - 03*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்.*

**அறிவித்தல்**

*1997/18 ஆம் இலக்க 2016.12.15 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கொக்கல கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ பிரதேசத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறியத் தரப்பட்டுள்ளது.*

| | மீன்பிடி கடனீரேரி முகாமைத்துவ குழுவின் பெயர் | பதிவிலக்கம் |
|---|---|---|
| 1. | கொக்கல – குருகந்த கடனீரேரி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ.கமிட்டு/கொ.க/01 |
| 2. | கொக்கல – துவ மலலகம கடனீரேரி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ.கமிட்டு/கொ.க/02 |
| 3. | கொக்கல – 144 ஏ மொதரகொட (சிங்க மீன்பிடி கிராமம்) கடனீரேரி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ.கமிட்டு/கொ.க/03 |
| | மீன்பிடி கடனீரேரி முகாமைத்துவ குழுவின் பெயர் | பதிவிலக்கம் |
| 4. | கொக்கல – பெலஸ்ஸ கடனீரேரி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ.கமிட்டு/கொ.க/04 |

*எம். சீ. எல். பர்னாந்து,*
*பணிப்பாளர் நாயகம்,*
*கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,*

*கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,*
*புதிய செயலகம்,*
*மாளிகாவத்தை.*
*2017, யூலை 10.*

EOG 04 - 0050

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.